326

Approved By the Text-Book Committee.

மணி. க.

நல்லொழுக்கக்கோவை.

# உலகநீதி

## நீதிக்கதைகள்.

எஸ். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்
இயற்றியது.

14 OCT 1924

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
பப்ளிஷர்ஸ் அண்டு புக்செல்லர்ஸ்,
மதுரை.

[... Reserved] [Price 2½ As.

1924.

TB
:O-,3x
N24
181632

# விளம்பரம்.

எங்கள் கம்பெனியில் சகலவித ஸ்கூல் புஸ்தகங்களும், எக்சர்சைஸ் 40, 64, 80, 128 பக்கம் நோட்டுகள், ஸ்டூடன்ஸ் 1, $1\frac{1}{2}$, 2 குயர் நோட்டுகள், டிராயிங் நோட்டு, சிறிது மீடியம், பெரிது, 1-முதல் 5-வரை தமிழ் காப்பி புஸ்தகங்கள், சீமை சிலேட்டுகள், சிலேட்பென்சல், காகிதபென்சல் தினுசுகள், இங்கு பில்ஸ், இங்க் பாட்டில், அடிக்குச்சி முதலிய ஸ்டேஷனரி சாமான்களும் தயாராக இருக்கின்றன. இன்னும் தங்கள் ஸ்கூலுக்குத் தேவையுள்ள அட்டை நாணயப்பெட்டி, பொருட்பாட வர்ணபடங்கள், ஜில்லா, இராஜதானி, இந்தியா முதலிய தேசபடங்கள், வெள்ளை கலர் சாக்பீஸ், அட்டன்டன்ஸ், அட்மிஷன், காண்டக்ட் ரிஜிஸ்டர்களும், ஸ்போர்ட்ஸ் சாமான்களும் சகாய விலைக்குத் தருகிறோம். தேவைக்கு ஆர்டர் செய்தால் தகுந்த கமிஷன் தரக்கூடும்.

---

P. N. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

பப்ளிஷர்ஸ் & புக்ஸெல்லர்ஸ் & ஸ்டேஷனர்ஸ்,

புதுமண்டபம், மதுரை.

உ

மணி-க.

நல்லொழுக்கக்கோவை.

உலக நீதி

# நீதிக்கதைகள்.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

---

சோழவந்தான் மகாவித்வான்

ஸ்ரீமாந். அரசஞ்சண்முகனார் அவர்கள்

மருகர்

எஸ். சோமசுந்தரம்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

---

மதுரை

பி. நா. சிதம்பரமுதலியார் பிரதர்ஸ்

புக்செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்

வெளியிட்டது.

---

*Registered Copy Right.*

1924.

14 OCT 1924

170 . [D]

176

உ

குமரகுருபரன்துணை.

ஆவணக்காப்பக
181632
சென்னை-600 008.

# நூன் முகம்.

பூவுலகிலுள்ள பல்வகைப்பிறப்புக்களிலும் உயர்ந்தது மக்கட் பிறப்பே. மக்களாகப் பிறந்தவர் அடைதற்குரிய உறுதிப் பொருள் நான்கு. இவை, உண்மை யுணர்த்தும் மெய்யறிவையுடைய பெரியோரால் அகவிருளிரிய அருளிச் செய்யப் பெற்ற நூல்களால் அடையத் தக்கன. இத்தகைய உறுதி நூல்களோ உலக மொழியென் றோதப்பெறும் சிறப்பினமைந்து, இயல் இசை நாடகம் என்னும் முத்திறத்ததனால் முத்தமிழ் என்று போற்றப் பெறும் தமிழ் மொழியிற் பலவாக மலிந்து கிடக்கின்றன. இவற்றுள், நமது நாட்டுத் தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலும், எலிமெண்டரிப் பள்ளிக் கூடங்களிலும் பயிலும் சிறுவர்கட்கு ஒழுக்க உணர்வு நூல்களாகவமைத்துப் பெரும்பாலும் பயிற்றப் படுபவை, நல்லிசைப் புலமை மெல்லியல் நல்லாரும், ஆதி பெற்ற அருங்கலை மகளுரு வினரு மான ஔவையார், புலவர் களி அமுதொழுகு புதுமொழி கூட்டுணப் பல கவிநூல் இயற்றி யருளிய அதிவீரராம பாண்டியர் முதலியோரால் சிற்றடிச் செய்யுள்களால் யாக்கப் பெற் றிலங்கும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை முதலியன. ஆத்திசூடி, கொன்றைவேந்தனில் அமைந்து கிடக்கும் பொருளையும் போக்கையும் அறிந்த ஆங்கிலர், செரு மனியர், உலாந்தர் முதலியோர் அவற்றைத் தத்தம் மொழியிலும் பெயர்த் தமைத்து மாணவர்க்கு அறிவூட்டி வருகிறார்களெனின், நந்தமிழ் நூற் பெருமை நவிலும் திறத்ததோ ?

நமது நாட்டுப் பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு மேற் கூறிய ஒழுக்க நூல்களன்றி உலகநீதி என்ற ஒன்றும் கற் பித்து வரப்படுகிறது. உலகமக்கட்குப் பொதுவான உறுதி மொழிகளை ஓது முறையில் உயர் வுறும் உலகநீதி என்னும் இந்நூலையும் ஒழுக்க நூல் பல உரைத் தருளிய ஔவை யாரே பாடி யருளினர் என்பர். ஆனால், அச்சிட்டு வழங்கும் உலகநீதி மூல முடிவுச் செய்யுளில் "ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன், உண்மையாய்ப் பாடி வைத்த உலகநீதி" என் றும், உலக வழக்கில் "ஓதிவைத்த வாத்தியார் உலகநாதன், உண்மையாய்ப் பாடி வைத்த உலகநீதி" என்றும் காணப்படு வதை; தமிழ் நாட்டுப் பாவலர்களின் வரலாற்றை ஒருவாறு தொகுத் தெழுதி இற்றைக்கு முப்பானைந்தாண்டுகட்கு முன் னர் வெளியிட்ட பாவலர் சரித்திர தீபகாசிரியர் இந்நூலா சிரியரைப்பற்றி எழுதியிருப்பதுடன் ஒப்புநோக்குவோர் உலகநாதன் என்பவரே உலகநீதிக் காசிரியர் என்று சொல்ல முற்படுவர். ஆகலின், இவ்வுலக நீதியை இயற்றியவர் இன்னா ரென்று தெள்ளிதிற் றுணிந்துரைக்கக் கூடவில்லை.

இத்தகைய நூலில் அடங்கிய நீதிகளைக் கதை வாயி லாகக் காட்டி மாணவர்களை நல்லொழுக்க முற முயற்சித்து வருபவர்களில் ஒருவராவர் சோமசுந்தரம் பிள்ளையவர்கள். இவர்கள், தொல்காப்பியப் பாயிர விருத்தி, திருக்குறட் சண் முக விருத்தி, முதலிய உயரிய நூல்க ளியற்றித் தம் நுணு கிய அறிவை உலகோ ருணரச் செய்த சோழவந்தானூர். திரு-அரசஞ் சண்முகனார் அவர்களின் மருகர். அன்னாரிடம் தமிழ்க் கல்வியும் பயின்றவர். இவர்கள் எழுதியுள்ள கதை கள் பல, நம் நாட்டு இதிகாச புராணங்களில் அமைந்தவை. இக் கதைகளை இளமையிற் கற்றுணரும் சிறுவர் சிறுமியர் கள் அறிவு முதிர்ச்சிக் காலத்தில் அவை அகன்றமைந்து

கிடக்கும் பெருநூல்களையும் கற்கப் பேரவாக் கொள்பவராவர். கதைகளிற் பொருந்திய வாக்கியங்கள் சிறுவர்கள் நினைப்பிற்கேற்ற சிறுமொழித் தொடர்களே.

இந்நூல், துரைத்தனப் பாடப் புத்தகக் கழகத்தாரால் நீதிக்கதைப் பாடப் புத்தகமாக அங்கீகரித்தற் குரிய தொன்றுதலின்; அவர்கள் இதனை அவ்வண்ணம் அங்கீகரித்து ஆசிரியரை இதுபோன்ற வேறு கதைகளையும் விரைவில் எழுதி வெளியிடத் தூண்டுவார்களென்று நம்புகிறேன். தமிழ் நாட்டுப் பள்ளிக்கூடத் தலைமை யாசிரியர்களும் இத்தகைய நூலை ஏற்ற வகுப்புகட்குப் பாடப் புத்தகமாக ஏற்படுத்தி நூல் வெளியிடும பெருமையுறும் பி. நா. சிதம்பர முதலியார் கம்பெனியாரை ஆதரிக்குமாறு வேண்டுகின்றனன்.

புலவரகம்,
2—6—1924.

பு. சிதம்பரபுன்னைவனநாதன்,
*தமிழ்க்குறமுடியான்.*

# பொருள்விளக்கம்.

நீதியும் கதையும். பக்கம்.

1. கல்வி அழகு கனதனமுந்தரும்.
அழகனும் ஆறுமுகமும். 3

2. பொல்லாங்குரைத்தால் எல்லா நலன்கெடும்.
தக்ஷன் சரிதம். 4

3. பெற்றோரைமறந்தார் பெருமையையிழப்பார்.
சாமிநாதன் சரிதம். 6

4. வஞ்சகனுறவால் மாய்வும்வருமே.
காளமாமுனி சரிதம். 7

5. செல்லாஇடஞ்செலின் அல்லலுண்டாகும்.
முனியப்பன் சரிதம். 8

6. தனிவழியேகின் சங்கடம்வருமே.
வணிகன் சரிதம். 9

7. அடுத்தாரைக்கெடுப்போன் ஆருயிர் நீங்கும்.
வில்வலன்வாதாவி சரிதம். 11

8. தேடியுமுண்ணான் திரவியஞ்சிதையும்.
கருமி சரிதம். 12

9. தருமஞ்செய்வோர் தரணியையாள்வார்.
புக்கணன் சரிதம். 13

10. அற்பர்சிநேகம் ஆபத்தைவிளைக்கும்.
கழுதும் பூனையும். 14

11. கற்றோரைப்பழிப்போன் கனத்தையிழப்பான்.
மதியிலான் சரிதம். 16

12. வாய்பார்த்துஇருந்தால் வருங்கேடதிகம்.
முத்தப்பன் சரிதம். 17

13. அவமானம்வேண்டின் அகங்காரியைச்சேர்.
துரோணரும் துருபதனும். 19
14. அறிஞர்சொல்மறப்பின் ஆபத்தாகும்.
அன்னிஅரசன் சரிதம். 20
15. முன்கோபியர்சிநேகம் முற்றிலுந்திங்கே.
துருவாசரும் கிருஷ்ணனும். 21
16. இகழிடஞ்செல்லின் இன்னலேயாக்கும்.
சுப்பன் சரிதம். 23
17. நன்றியைமறந்தார் நாசமேயடைவார்.
விச்சுவஉருவன் சரிதம். 24
18. பிணைபோய்நின்றால் பெருங்கேடுண்டாகும்.
போர்ன்னன் சரிதம். 25
19. கட்டுரையுரைப்போன் கசையடிபெறுவான்.
நாகப்பன் சரிதம். 27
20. நோவஉரைக்கின் சாவதுநிசமே.
சிசுபாலன் சரிதம். 28
21. சழக்குவழக்கால் தண்டனைவருமே.
வாயாடிவம்பன் சரிதம். 30
22. வல்லபமுரைத்தா லல்லலேயதிகம்.
தாடகை சரிதம். 31
23. மெய்யேபேசின் வையமும்போற்றும்.
வேலன் சரிதம். 32
24. பரமனைத்தொழுவார்பெருமையை அடைவர்.
சாக்கியநாயனர் சரிதம். 35

---

கணபதி துணை.

# உலகநீதிமூலம்.

1. ஓதாமல் ஒரு நாளும்
இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ
டிணங்க வேண்டாம்.
5. போகாத இடந் தனிலே
போக வேண்டாம்.
6. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டாம்.
7. அடுத்தவரை ஒரு நாளும்
கெடுக்க வேண்டாம்.
8. தனம் தேடி உண்ணாமல்
புதைக்க வேண்டாம்.
9. தருமத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.
10. கொலை களவு செய்வாரோ
டிணங்க வேண்டாம்.

11. கற்றவரை ஒரு நாளும் பழிக்க வேண்டாம்.
12. வார்த்தை சொல்வார் வாய் பார்த்து திரியவேண்டாம்.
13. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.
14. மூத்தோர் சொல் வார்த்தை தனை மறக்கவேண்டாம்.
15. முன் கோபக்காரரோ டிணங்க வேண்டாம்.
16. சேராத இடந் தனிலே சேர வேண்டாம்.
17. செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
18. பிணையிட்டுத் துணைபோய் நீ நிற்க வேண்டாம்.
19. காணாத வார்த்தையைக் கட் டுரைக்க வேண்டாம்.
20. புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.
21. வாதாடி வழக்குரைத்துச் சொல்ல வேண்டாம்.
22. திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்.
23. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
24. தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.

பரமபதி துணை.

---

உ ல க நீ தி

---

# நீதிக்கதைகள்.

## 1. கல்வி அழகு கனதனமுந் தரும்.

[அழகனும் ஆறுமுகமும்.]

---

சதுர்வேதபுரம் என்பது ஒரு ஊர், அதில் ஒரு தனவான் இருந்தான், அவனுக்கு இரண்டு பிள்ளைகள், மூத்தவன் பெயர் அழகன், இளைய வன் பெயர் ஆறுமுகம்.

மூத்தவன் அழகில் சிறந்தவன், ஆனல், படிப்பு இல்லாதவன், எழுத்துவாசனையே அற்ற வன், எழுதவும் படிக்கவும் அவனுக்குத் தெரி யாது, பள்ளிக்கூடத்துக்கும் ஒழுங்காக அவன் போவது இல்லை, ஒருவருக்கும் அவன் கீழ்ப்ப டிந்து நடக்கவும் மாட்டான், தன் அழகையே பெரிதாக எண்ணி அவன் மகிழ்வான், எந்நேர மும் தன்னை அலங்கரிப்பதிலேயே அவன் பிரி

யம் கொண்டவன், இடம்பத்திலேயே அவன் காலம் கழித்துவந்தான், வேறுவேலையும் அவனுக்குத் தெரியாது.

வயதும் ஏறிற்று, சொத்தும் தொலைந்தது, தரித்திரப்பட்டான், அதினால், மிகுந்த கஷ்டமும் அடைந்து வருந்தினான்.

ஆறுமுகமோ அப்படி இல்லை, யோக்கியன். எல்லோருக்கும் கீழ்ப்படிந்து நடப்பவன், கல்வி அழகே அழகு என்று அவன் கருதினான், பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகச் சென்றான், பாடங்களை நன்றாகப் படித்தான், வீண்பொழுது போக்குவது இல்லை, வர வர கல்வியில் தேர்ச்சி அடைந்தான், பெரிய வித்துவான் ஆனான், எங்கும் அவன் புகழ்பெருகியது, அரசனும் அறிந்தான், வேண்டிய பொருளுதவி செய்து ஆதரித்தான். ஆதலால்,

ஓதாம லொரு நாளும் இருக்க வேண்டாம்.

---

## 2. போல்லாங்குரைத்தால் எல்லாநலன் கேடும்.

[தக்ஷன் சரிதம்]

---

தக்ஷன் என்பவன் ஒரு அசுரன். பிரமாவுக்கு அவன் மகன். தவஞ் செய்து உமாதேவியைப் புத்திரியாகப் பெற்றவன். மகா வல்லபன். அவன் ஒருவரையும் மதிப்பது இல்லை. எல்லோ

ரையும் பொல்லாங்கு சொல்லுவான். அதினால் உலகமும் அவனை நிந்திக்கும்.

ஒரு காலத்தில் பிரம யாகம் ஒன்று அவன் செய்தான். அது பெரிய யாகம். தேவலோகமும் புகழத்தக்கது. யாகத்துக்குத் தேவர்களும் முனிவர்களும் வந்து கூடினார்கள். யாகமும் முடிந்தது. அவிப்பாகம் சிவ பெருமானுக்குத் தர வேண்டும். அப்படி அவன் செய்யவில்லை. சிவ பெருமான் மீது பழிகூறினான், நிந்தித்தான். உமாதேவிக்கு அது பொறுக்கவில்லை. அக்கினியில் மூழ்கிவிட்டாள். சிவபெருமானுக்கு வருத்தம் வந்தது. கோபமும் தோன்றினது.

அகோர வீரபத்திரரை உண்டு பண்ணினார். தக்ஷன் உயிரை வாங்கும்படி செய்தார். அவரால் தக்ஷன் தலை துணிக்கப்பட்டது. அறுந்த தலையை யாகத்தீயில் இட்டு எரித்தார். தக்ஷன் மாண்டான் எல்லோரும் கெஞ்சினார்கள். உயிர்ப்பிக்கும்படி வேண்டினார்கள். வெட்டிய தலைக்கு ஆட்டுத் தலையை ஒட்டினார், தக்ஷனை உயிரோடு எழுப்பினார் சிவபெருமான். இதனால், தக்ஷன் பொல்லாங்கு பேசிப் பெருமையை இழந்ததுடன், உள்ள தலைபோய் ஆட்டுத் தலையைப் பெற்றான்.

ஆதலால்,

ஒருவரையும் பொல்லாங்கு பேசவேண்டாம்.

## 3. பெற்றோரை மறந்தார் பெருமையை இழப்பார்.

[சாமிநாதன் சரிதம்.]

---

கண்ணனூர் என்பது ஒரு குக்கிராமம் அதில் வைசியன் ஒருவன் இருந்தான். பெயர் சாமிநாதன். அவனுக்கு வயதுமுதிர்ந்த 'தாம்' ஒருத்திமட்டும் உண்டு. அவளை அவன் மதிப்பதுஇல்லை, பேணுவதும் இல்லை. தன்னுடைய சுகத்தையே அவன் கருதி வந்தான்.

அவனுக்கு ஒரு தோழன். அவன் மிகவும் நல்லவன், தந்தை தாயை ஆதரிப்பவன். அவர்களிடத்து அன்புமுடையவன். அவன் காசி மகிமையை அறிய ஆசை கொண்டான். அதற்காக ஒருமுனிவர் இருப்பிடம் செல்லப் புறப்பட்டான் இது சாமி நாதனுக்குத் தெரிந்தது. சாமிநாதனும் உடன் சென்றான்.

இருவரும் முனிவர் ஒருவரைக் கண்டார்கள். வந்தன வழி பாடு செய்து காசி மகிமையை அறிவிக்கும்படி வேண்டினார்கள். முனிவர் இருவரையும் பார்த்தார். 'சாமிநாதன்' பெற்றவளைப் பேணாதவன். அவள் மனது நோவும்படி நடந்தவன். அவளிடத்து அன்பு இல்லாதவன். பாவமே ரூபமாக அவதரித்த பாதகன். காசி மகிமையை அறிய யோக்கியதை இல்லாதவன். ஆகையால் அவன் வந்தவழியே திரும்ப வேண்டும் என்றார்.

அவன் தோழனைமட்டும் அழைத்தார். உண்மையை ஓதினர். வேண்டிய வரமும் அளித்தார். சாமிநாதன் வெட்கம்அடைந்து வீடுசென்றான்.

ஆதலால்,

மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்.

---

## 4. வஞ்சக னுறவால் மாய்வும் வருமே.

[காளமாமுனி சரிதம்.]

---

துரியோதனன் பாண்டவர்களுடைய பங்காளி. கொடிய வஞ்சகஸ்தன். பாண்டவர்கள் உயிரைக் கொல்லவே முயற்சி செய்தான். காரியம் சித்தியாகவில்லை. காளமாமுனிஎன்பவர் ஒரு ரிஷி. தவத்தில் அவர்சிறந்தவர். காட்டில் அவர் இருந்தார். அவர்உதவியை அவன்விரும்பினன்.

காட்டுக்கு ஓடினன். ரிஷியை அடுத்தான். பாண்டவர்களைக் கொல்லும்படி சொன்னன். ரிஷியும் ஒப்புக்கொண்டார். அதற்காக * அவிசார யாகம் வளர்த்தார். அதிலிருந்து ஒருபூதம் கிளம்பிவந்தது. எனக்கு என்ன வேலை என்று அது கேட்டது.

பாண்டவர்கள் உயிரை வாங்கிவிடு என்று ஏவினர். பூதம் புறப்பட்டது. பாண்டவர்களைத்

---

* அவிசார யாகம் என்பது பகைவரைக் கெடுக்கும் ஒருவகை யாகம்.

தேடினது. நாலா பக்கமும் அலைந்தது. பின்பு கண்டது. கிருஷ்ணனுடைய சூழ்ச்சியால் பாண்டவர்கள் இறந்து பிணமாய்க்கிடந்தார்கள். செத்தவர்களைக் கொல்லும்படி அனுப்பினதற்காக அது கோபம் கொண்டது.

வந்த வழியே பூதம் திரும்பிற்று. காளமா முனியை ஒரே அறையில் அறைந்து கொன்றது. இதனால் வஞ்சகனேடு முனி இணங்கினர், உதவி செய்ய நினைத்தார், தன்உயிரையே இழந்தார்.

ஆதலால்,

வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.

---

## 5. செல்லா இடம் செலின் அல்லலுண்டாகும்.

[முனியப்பன் சரிதம்.]

---

ஒரு பெரிய வனம், அதில் ஒரு பெரியவர் இருந்தார், அவருக்கு மாடுகள் அதிகம். மாடு மேய்ப்பவன் முனியப்பன், அவன் வேண்டிய பணிவிடையும் அவருக்குச் செய்வான். மாட்டுக்குப் புல் அறுத்து வந்தும் போடுவான். பொய், திருடு, வஞ்சகம் முதலிய கெட்டகுணங்கள் அவனிடம்இல்லை. ஆனல் பிடிவாதக்காரன். பெரியவருக்கும் முனியப்பன் இடத்தில் பிரியம் அதிகம்.

ஒரு நாள் மாடுமேய்க்க முனியப்பன் காட்டுக்குச் சென்ருன். வடக்குத் திசையை நோக்கி

னுன், வெகு தூரம் சென்றுன். அங்கு, கல் ஒன்று நட்டிருந்தது. ஒருவரும் இந்த வழிபோ கக் கூடாது என்று அதில் எழுதி இருந்தது. அதை அவன் வாசித்தான். மீறிச் செல்ல எண் ணம் கொண்டான். சிறிது தூரம் சென்றுன். அங்கு ஒரு குளம்.

அது தேவகன்னிகள் நீராடுவதற்கு உரி யது. அதில், அவர்கள் குளித்துக் கொண்டிருந் தார்கள். 'முனியப்பன்' அவர்களைக் கண்டான். அவர்களும் இவனைப்பார்த்தார்கள். ஏன் இங்கு வந்தாய்? வந்தது தப்பிதம் அல்லவா? தப்பிதத் துக்காக நீ கல்லாகப் போகக் கடவது என்று சபித்தார்கள். முனியப்பன் கல் உருவம் ஆனுன். இதினுல் அவரவர்க்குத்தகுந்த இடத்தில் செல்ல வேண்டும். தகாத இடத்தில் முனியப்பன் மீறிப் போனுன், கல் உருவம் ஆனுன். ஆதலால்,

போகாத இடந்தனிலே போகவேண்டாம்.

---

## 6. தனிவழியேகின் சங்கடம்வருமே.

[வணிகன் சரிதம்.]

---

பனையூர் என்பது ஒரு சிறு கிராமம், அதில் ஒரு வர்த்தகன் இருந்தான், வியாபாரத்துக்காக வேறு ஒரு ஊருக்குப்போக நினைத்தான், வேண் டிய பணமும் எடுத்துக் கொண்டான், தனிமை யாகவே புறப்பட்டான்.

செல்லும்போது ஒரு ஊரில் இருட்டிவிட்டது, குடியானவன் ஒருவன் சந்தித்தான், ஐயா! வர்த்தகரே! நீர் போகவேண்டிய ஊரோ அதிக தூரத்தில் இருக்கிறது, 'வழியோ' திருடர்பயம் உள்ள காடு. ஆதலால், இரவில் இங்கு தங்கி இரும், விடிந்ததும் புறப்படும், தனிமையாகப் போகக் கூடாது. துணையோடல்லது நெடுவழி போகேல் என்ற முதுமொழியைக் கவனித்துப் பாரும் என்று தடுத்தான்.

வர்த்தகன் காதில் நுழையவில்லை, மீறிச் சென்றான், சிறிது தூரம் போனான், வழியில் திருடன் ஒருவன் வந்தான், வர்த்தகனைக் கண்டான், கையைப் பின்கட்டாய்க் கட்டினான், காலையும் கட்டினான், பணத்தைப் பிடிங்கினான், வந்த வழியே ஓடிவிட்டான், பொருளும் போய் விட்டது.

வர்த்தகன் இரவு முழுதும் கஷ்டப்பட்டுக் கிடந்தான், பொழுதும் விடிந்தது, வழிப் போக்கர்கள் கண்டார்கள், கட்டை அவிழ்த்து விட்டார்கள். 'வர்த்தகன்' குடியானவன் சொல்லையும் மீறினான், தனிமையாகச் சென்றான், பொருளையும் இழந்து துன்பம் அடைந்தான். ஆதலால்,

அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.

## 7. அடுத்தாரைக் கெடுப்போன் ஆருயிர் நீங்கும்.

[இல்வலன் வாதாவி சரிதம்.]

---

துருவாச முனிவருக்கும் அஜமுகி என்பவளுக்கும் பிறந்தவர்கள். 'இல்வலன்' 'வாதாவி' இவர்கள் கொடிய துஷ்டர்கள். அடுத்தவரைக் கெடுக்கும் மஹா பாபிகள். கொலைக்கு அஞ்சாதவர்கள், மந்திர தந்திரம் கற்றவர்கள். நரமாமிச விருப்பம் உடையவர்கள்.

இல்வலன் முனிவனாக வேடம் கொள்வான், வாதாவி ஆடாக உருமாறுவான், முனிவர்களை விருந்துக்கு அழைத்து ஆட்டைக் கறி சமைத்து இல்வலன் படைப்பான், விருந்து உண்டபின் வாதாவி என இல்வலன் அழைப்பான், உண்டவரது வயிற்றைக் கிழித்துக் கொண்டு ஆட்டுருவத்தோடு வாதாவி வெளி வருவான், இப்படி முனிவர் பலரைக் கொல்வதும், கொன்று புசிப்பதும் இவர்கள் வழக்கம்.

ஒரு நாள் அகஸ்திய முனிவர் வந்தார், விருந்தாக அவர்களை அடுத்தார், இல்வலன் ஆட்டைக் கறி சமைத்தான், அகஸ்தியருக்குப் படைத்தான், அவரும் உண்டார், இல்வலன் வாதாவி என வழக்கம் போல் அழைத்தான், வாதாவி வயிற்றைக் கிழித்துக் கொண்டு வர எத்தனித்தான், அகஸ்தியர் இதை அறிந்தார்,

வயிற்றைத் தடவினர், ஆடு ஜீரணம் ஆய்விட்டது, இல்வலனேயும் சபித்துக் கொன்ருர், இருவரும் ஏன் மடிந்தார்கள்? அடுத்தாரைக் கெடுத்ததாலல்லவா. ஆதலால்,

அடுத்தவரை யொருநாளும் கெடுக்கவேண்டாம்.

---

## 8. தேடியும் உண்ணுன் திரவியம் சிதையும்.

[கருமி சரிதம்.]

---

வீரமாபுரி என்பது ஒரு ஊர். அதில் கோமுட்டி ஒருவன் இருந்தான், வெகுபணம் அவன் சம்பாதித்தான். ஆனல் நல்ல சாப்பாடு சாப்பிடுவது இல்லை, நல்ல வேஷ்டி உடுப்பது இல்லை, கந்தலேயே உடுத்துவான். கால் வயிறுக்கஞ்சியே குடிப்பான்.

பெண்டு பிள்ளைகள் உண்ணவும் உடுத்தவும் சகிக்கான், பிச்சை இட்டு அறியான், மஹாலோபி. எல்லோரும் அவனை கருமி என்றே அழைப்பார்கள்.

கருமி பணத்தை எல்லாம் ஒரு பெட்டியில் போட்டு அப் பெட்டியைத் தனது தோட்டத்து மூலையில் புதைத்தான், இது ஒருவருக்கும் தெரியாது, வீடு வந்து சேர்ந்தான்.

பின்பு புதைத்த இடத்துக்குத் தினந்தோறும் போவதும் பார்ப்பதுமாக இருந்தான்.

இதை ஒருவன் அறிந்தான். ஒருவரும் இல்லாத சமயம் பார்த்தான். தோட்டத்தில் நுழைந்து புதைத்த இடத்தைத் தோண்டினுன், பணப் பெட்டி அகப்பட்டது, எடுத்துக்கொண்டு போய் விட்டான்.

மறுதினம் வழக்கப்படி கருமி வந்து பார்த் தான். பணப் பெட்டியைக் காணவில்லை, பெரு மூச்சுவிட்டு வயிறு எரிந்து மடிந்தான் கருமி. இதினுல் பணத்தைத் தேடவேண்டும், அதின் பலனை அடைய வேண்டும். கருமி அப்படி இல்லை, தேடிப் புதைத்தான், பறிகொடுத்து மாண்டான். ஆதலால்,

தனந்தேடி உண்ணுமல் புதைக்க வேண்டாம்.

---

## 9. தருமம் செய்வோர் தரணியை யாள்வார்.

[புக்கணன் சரிதம்.]

---

ஒரு ஊரில் ஒருபிராமணர் இருந்தார். அவர் ஏழை, பெயர் வித்யாரணியர். ஸமஸ்கிருதத் தில் இவர் மஹாவல்லபர். வறுமையால் மெத்த வும் கஷ்டப்பட்டார், தரித்திரத்தை நீக்க வழி தேடினர். திருமகளையும் கலைமகளையும் குறித்துக் காட்டில் தவம் செய்தார். நீண்டகாலம் ஆயி ற்று. பலனும் இல்லை, உணவுக்கும் கஷ்டம்

அடைந்தார், இதைப் புக்கணன் அறிந்தான், புக்கணன் என்பவன் அரசனது மாடு மேய்ப்பவன். நல்ல யோக்கியன். தருமம் செய்வதில் அவனுக்கு விருப்பம் அதிகம். ஆனால் ஏழை, வீணாக ஒழுகும் பாலை வித்யாரணியருக்குக் கொடுத்து வந்தான். உணவைப் பற்றிய கவலையை ஒழித்தான்.

வித்யாரணியர் கவலை இன்றித் தவம் பண்ணினர். திருமகளும் கலைமகளும் தோன்றினார்கள். தவத்துக்குப்பலன் இந்தப் பிறப்பில் இல்லை. மறுபிறப்பில் என்றார்கள். கோபம் பிறந்தது. பூணூலை அறுத்து எறிந்தார். சந்நியாசி ஆனார். 'சந்நியாசம்' மறுபிறப்பு. இருவரும் வந்தார்கள். வரத்தைக் கேள் என்றார்கள்.

அதற்கு வித்யாரணியர் 'நானோ' சந்நியாசி. சந்நியாசிக்கு சரஸ்வதி அருளே தேவை. பால் கொடுத்து ஆதரித்தவன் புக்கணன், புக்கணனுக்கு லக்ஷ்மி அருள் வேண்டும் என்றார், அப்படியே கொடுத்தார்கள்,

புக்கணனுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் பிறந்தது. புக்கணன் ஹஸ்திநாபுரத்துக்கு அரசனானான். ஆதலால்,

தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.

## 10. அற்பர்சிநேகம் ஆபத்தை விளைக்கும்.

[கழுகும் பூனையும்.]

---

திரிகூடபருவதம் என்பது ஒருமலை. அதில் ஒரு மரத்தில் சரற்கவன் என்ற கிழக்கழுகு ஒன்று இருந்தது. அக்கழுகுக்கு நகமும் இல்லை, கண்ணும் கிடையாது. வேறு பறவைகள் கொஞ்சம் கொஞ்சம் இரை கொடுக்கும். அதைத் தின்று கழுகு ஜீவித்திருந்தது.

ஒரு நாள் கழுகினிடத்தில் நெடுஞ்செவியன் என்னும் ஒருபூனை வந்தது. அது பொல்லாதது, அடுத்துக்கெடுக்கும் குணம் உடையது, பறவைக் குஞ்சுகளைத்தின்ன அது எண்ணியிருந்தது. கழுகின் உறவைத் தேடினது, வெகு நம்பிக்கை வரப் பண்ணினது, கழுகும் பூனையை நேசித்தது, இடமும் கொடுத்து இருக்க வைத்தது.

பின்பு பறவைக் குஞ்சுகளைக் கழுகின் வீட்டில் இருந்து கொண்டே கொன்று தின்றது. தினந்தோறும் இப்படியே செய்துவந்தது. இதுகிழக் கழுகுக்குத் தெரியாது.

குஞ்சுகளைக்காணமல் எல்லாப்பறவைகளும் வருத்தப்பட்டு நாலா பக்கமும் தேடின. குஞ்சுகளைக் காண இல்லை. கிழக்கழுகின் இருப்பிடம் வந்தன. வரவும் பூனை அறிந்து ஓடிப் போய்

விட்டது. எலும்பையும் சிறகையும் வந்த கழுகு கள் கண்டன.

குஞ்சுகளைப் பக்ஷித்தது கிழக்கழுகுதான் என்று எல்லாப் பறவைகளும் நிச்சயித்தன. உடனே கழுகைக் கொத்திக் கொன்றன. குஞ்சுக ளைத் திருடிக் கொன்று தின்றது பூனை. பூனைக்குக் கழுகு இடம் கொடுத்து நேசித்தது. அதனால் கழுகுகொல்லப்பட்டது ஆதலால்,

கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்.

---

## 11. கற்றோரைப் பழிப்போன் கனத்தை இழப்பான்.

[மதியிலான் சரிதம்.]

---

பாண்டி நாட்டில் ஒரு பெரிய தமிழ் வித்து வான். இலக்கிய இலக்கணத்தில் அவர் மஹா வல்லபர். எவரும் செய்யமுடியாத கவியும் அவர் பாடுவார். எல்லா மதத்தாரும் ஒப்பும்படி அதற்கு அருத்தமும் சொல்லுவார். வாய் திறந்து அவர் எதைச் சொன்னாலும் பலிக்கும். கற்றவர்போற் றும் கவிராயர் அவர், காவலர் போற்றும் நாவ லர், அவரை அறியாதவர் ஒருவரும் இல்லை, எங்கும் அவர் கீர்த்தி பரவிற்று.

அவர் ஒரு சபைக்குச் சென்றார், பெருங் கூட்டம் கூடி இருந்தது, 'கடவுள் வழிபாடு'

என்பதைப் பற்றிப் பிரசங்கித்தார். எல்லோரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். மதியிலான் என்பவன் ஒருவன், அவன் படிப்பு இல்லாதவன், கலாசாலைக்கு அவன் போவதும் இல்லை, படிப்பாளியை அவன் பழிப்பான், இழிவாகப் பேசுவான், அவனும் அங்கே இருந்தான், சொல்லுவதைக் கேட்டான், சிரித்தான்.

பரிகாசம் செய்தான், இவர், வித்துவானோ, கத்துவானோ, என்றான். எல்லோரும் வருத்தப்பட்டார்கள். வித்துவானுக்குக் கோபம் மூண்டது. ஏ! புத்தியில்லாதவனே! கற்றோரைப் பழிக்கும் முட்டாளே! கத்துவான் என்றதால் 'நீயே' பித்துப் பிடித்துக் கத்தக் கடவது என்றார். உடனே புத்தி மாறாட்டம் கொண்டது. மதியிலான் பித்துக் கொள்ளியாகிக் கத்தினான்.

சபையில் உள்ளவர்கள் அறிந்தார்கள், நடுங்கினார்கள், மதியிலான் செய்த குற்றத்தை மன்னிக்க வணங்கினார்கள், பித்தம் தீரும்படி வேண்டினார்கள்; வித்துவானும் மனம் இரங்கினார், பித்தம் தீருக, நல்ல புத்தி உண்டாகுக என்று சொன்னார், அப்படியே பித்து நீங்கிப் புத்தி வந்தது, பழிப்பது இல்லை என்று வித்துவானது பாதத்தைப் பணிந்தான் மதியிலான். ஆதலால்,

கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.

---

## 12. வாய் பார்த்திருந்தால் வருங்கேடு அதிகம்.

[முத்தப்பன் சரிதம்.]

---

கண்டிகுடி என்பது ஒரு தீவு, அது நான்கு புறமும் கடலால் சூழப்பட்டது, அதற்குத்தபால் போக்கு வரவு கிடையாது, வருஷத்திற்கு ஒரு முறை ஒரு கப்பல் வரும், அதுதான் பிரயாணிகள் போக்கு வரவுக்கு உரியது, அதில் ஒரு வியாபாரி, நிலுவை ஏராளமாக அவர் விட்டிருந்தார், வசூல் ஆகவில்லை, வரவேண்டிய தொகைக்குப் பத்திரம் எழுதி வாங்கி இருந்தார்.

வியாபாரிக்கு நோய் கண்டது, படுத்த படுக்கையில் இருந்தார், வெகு நாள் வரை நோய் தீர இல்லை, வரவேண்டிய தொகையும் வரவில்லை, பத்திரத்துக்கு வாய்தாவும் நெருங்கிற்று, வழக்குத் தொடுக்கக் கோணபுரி போக வேண்டும், கப்பலும் வந்து நின்றது.

வியாபாரிக்கு வேலைக்காரன் ஒருவன், பெயர் முத்தப்பன், முத்தப்பன் வாய்ப்பேச்சுக் கவனிப்பவன், வழியில் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருந்தால், அவன் அங்கே போவான். பேச்சைக் கவனிப்பான், சந்தோஷம் அடைவான். இது அவன் வழக்கம். முத்தப்பனை வியாபாரி அழைத்தார், பத்திரத்தை அவன் கையில் கொடுத்தார், அப்பா! முத்தப்பா! கோணபுரிக்கு

181632

நீ போக வேண்டும், நீ எனக்காக வழக்குச் செய்ய வேண்டும், பத்திரத்துக்கு நாளை வரை வாய்தா, கப்பலும் வந்து நிற்கின்றது, சீக்கிரம் போ என்று அனுப்பினர்.

முத்தப்பனும் புறப்பட்டான், வழியில் ஒருவர் வேடிக்கைக் கதை வாசித்துக் கொண்டிருந்தார், கதையைக் கவனித்துக் கொண்டே இருந்தான், பொழுது போயிற்று, மறுநாள் கப்பலுக்குப் போனுன், கப்பலும் இல்லை, திரும்பி வீடு வந்தான், பத்திரத்தின் வாய்தாவும் தீர்ந்தது, வியாபாரி அதிக நஷ்டம் அடைந்தார், அதினுல் கவலை கொண்டு இறந்தார். வாய் வார்த்தையை முத்தப்பன் கவனித்தான், கப்பல்போய் விட்டது, வியாபாரி நஷ்டம் அடைந்து மாண்டார். ஆதலால்,

வார்த்தை சோல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்.

---

## 13. அவமானம்வேண்டின் அகங்காரியைச்சேர்.

[துரோணரும் துருபதனும்.]

---

துரோணர் என்பவர் பிராமணர், அவர் வில் வித்தையைக் கற்றுத் தேர்ந்தவர், வில்வித்தைக்கு அவர் குரு, துரோணுசாரி என்றும் அவரை அழைப்பதுண்டு, அவருக்குச் சிநேகன்

A 4

ஒருவன், பெயர் துருபதன், 'துருபதன்' பாஞ்சால தேசத்துக்கு அரசன், அவன் யாரையும் மதிப்பது இல்லை, கெருவம் கொண்டவன், இளமையில் அவன் இவரோடு அங்கிவேச முனிவரிடத்தில் வில்வித்தை கற்றவன்.

துரோணருக்கு ஒரு குழந்தை, பெயர் அசுவத்தாமன், குழந்தைக்குப் பால் இல்லாமல் தாய் வருத்தப்பட்டாள், தாயின் பெயர் கிருபி, 'கிருபி' பாற்பசு வாங்கித் தரும்படி புருஷனை வேண்டினாள், அவர் கையில் பணம் இல்லை, துருபதன் இடம் செல்ல நினைத்தார், பாஞ்சால தேசம்போனார், துருபதனைக் கண்டார்.

'துருபதன்' அவரை மதிக்கவில்லை, நீர் யார்? எந்த ஊர்? எங்கு வந்தீர்? என்று கேட்டான். இளமையில் உன்னுடன் வில் வித்தை கற்றுக் கொண்டவன் நான், என் பெயர் துரோணன், குழந்தைக்குப் பால் இல்லை, பால் மாட்டுக்காக உன்னிடம் வந்தேன் என்றார் குரு.

அதற்குத் துருபதன், உம்மை நான் அறியேன், நீர் சொல்லுவது பொய், பால் மாடும் இல்லை, வெளியே போம் என்று அசட்டை பண்ணினான்.

துரோணர் பிரமித்தார், மானத்தை இழந்தார், வருத்தத்தோடு வீடு திரும்பினார், மதியாத

வனிடம் துரோணர் சென்றார், அவமானம் அடைந்தார். ஆதலால்,

மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.

---

## 14. அறிஞர்சொல் மறப்பின் ஆபத்தாகும்.

[அன்னி அரசன் சரிதம்.]

---

சோழதேசத்தில் அன்னிகுடி என்பது ஒரு ஊர், அது பாபவிநாசம் ரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்தது, அதுக்கு ராஜா 'அன்னி' அன்னி புத்தியீனன், பொல்லாத நடையன், கொடுஞ்செயல் செய்வோன், பெரியவர் சொல்லை அவன் பேணமாட்டான், அன்னிக்கும் திதியன் என்பவனுக்கும் பகை, திதியன் திருவழுந்தூருக்கு அரசன்.

திதியனுக்குச் சொந்தமான குறுக்கை என்னும் ஒரு ஊர் இருந்தது, அதில் ஒரு புன்னை மரம், மரத்தை அன்னி வெட்டப் போனான், ஒரு பெரியவர் தடுத்தார், 'வெட்டாதே' வெட்டினால் பழி வரும் என்றார், அவர் பெயர் எவ்வி, அவர் மஹாபுத்திமான், அவர் பேச்சை அன்னி மதிக்க இல்லை, மறந்தான், அசட்டை செய்தான், மரத்தை வெட்டியே சாய்த்தான்.

இது திதியனுக்குத் தெரிந்தது. அடங்காத சினம் கொண்டான், பெரும்படையைத் திரட்டி

ஞன், யுத்தத்துக்கு வந்தான், யுத்தம் ஆரம்பம் ஆயிற்று, இருவரும் கை கலந்தார்கள், பெருத்த சேதம் உண்டானது, அன்னியின் படை முழுவதும் அழிந்தன.

வெற்றி திதியனுக்கு உண்டானது, திதியன் அன்னியைப் பிடித்தான், கண்ணைப் பிடுங்கிக் கொன்றுவிட்டான். பெரியோரான எவ்வியின் பேச்சை அன்னி மறந்தான், மதிக்கஇல்லை, திதியனுல் அவன் இறந்தான். ஆதலால்,

மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்.

---

## 15. முன்கோபியர் சிநேகம் முற்றிலும் தீங்கே.

[துருவாசரும் கிருஷ்ணனும்.]

---

துருவாசர் என்பவர் ஒரு ரிஷி, அவர் முன் கோபி, அவர் கோபத்தை ஒருவரும் தாங்க முடியாது, அவர் ஒரு விரதம் அநுஷ்டிக்க எண்ணினார், அது சாந்திராயண விரதம், அதை ஒரு மண்டலம் வரை செய்ய வேண்டும் என்று நிச்சயித்தார், அதுக்காக ஸ்ரீகிருஷ்ணன் உதவியை வேண்டினர், கிருஷ்ணனை அடுத்தார்.

நான் உனது அதிதி, சாந்திராயண விரதம் ஒரு மண்டலம் வரை அநுஷ்டிக்க எனக்கு விருப்பம், என்கோபம் நீ அறிவாய், என்மனம்

சந்தோஷிக்கும்படி நீ நடந்து கொள்ள வேண்டும். முடியுமானல் சொல்லு என்று கேட்டார். மனம் போல் நடப்பதாகவே கிருஷ்ணன் அன்புடன் ஒப்புக் கொண்டான்.

துருவாசர் விரதத்தை அநுஷ்டித்தார். கிருஷ்ணன் அவர் இஷ்டம்போல் நடந்து வந்தான். அவர் கூடவே இருந்தான். வேண்டிய பணிவிடைகளும் செய்தான். விரதத்தின்கடைசி தினம் வந்தது. விரதத்துக்குப் பாயசம் பண்ணும்படி கிருஷ்ணனிடம் சொன்னர். கிருஷ்ணன் அப்படியே செய்தான்.

கிருஷ்ணன் பெண்சாதி ருக்குமணி. ருக்குமணியையும் கிருஷ்ணனையும் துருவாசர் அழைத்தார். தம் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் பாயசத்தைத் தடவும்படி சொன்னர். இருவரும் தடவினர்கள். கட்டை விரலில் படவில்லை.

உடனே துருவாசருக்குக் கோபம்பிறந்தது. உன் கட்டை விரலில் அடிபட்டு உன் உயிர் போகக் கடவது என்று கிருஷ்ணனுக்குச் சாபம் இட்டார். கிருஷ்ணன் சாபத்தை அடைந்தான். துருவாசர் முன்கோபி. முன்கோபிக்குக் கிருஷ்ணன் இணங்கினன். மனம்போல் நடக்க இல்லை. சாபத்தை அடைந்தான். ஆதலால்,

முன்கோபக்காரரோ டிணங்கவேண்டாம்.

---

## 16. இகழிடஞ் செல்லின் இன்னலே யாக்கும்.

[சுப்பன் சரிதம்.]

சுப்பன் என்பவன் ஒரு பள்ளிச் சிறுவன். அவனுக்கு விளையாட்டில் பிரியம் அதிகம். கூட்டத்தைக் கண்டால் ஓடிப்பார்ப்பான். கிட்டிவிளையாட்டு, கவடிப்பாய்ச்சல் முதலிய ஆட்டத்துக்கு ஓடுவான், வேடிக்கை பார்ப்பான், சண்டை சச்சரவு நடக்கும் இடத்துக்கும் போவான், படிப்பதில் அவனுக்கு அவ்வளவு பிரியம் கிடையாது.

ஒரு நாள் சுப்பன் பாடசாலைக்குச் சென்றான். வழியில் ஒரு பெருங்கூட்டம் கூடி இருந்தது. அது குடியர்கள் கூட்டம். வெறி யேறி ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் சுப்பன் நுழைந்தான். வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தான். குடு குடு என்று ஒருவன் ஓடி வந்தான் போதை வெறியால் தடியைக் கொண்டு சுப்பனை அடித்தான்.

சுப்பனுக்கு மண்டை உடைந்தது. இரத்தம் பீறிட்டு ஒழுகியது. பேச்சு மூச்சு இல்லை. மயங்கிக் கீழே விழுந்து கிடந்தான் தாய் தந்தைக்கு இது தெரிந்தது. அலறிக் கொண்டு போனார்கள். சுப்பனை வண்டியில் ஏற்றி வீட்டுக்கு வந்தார்கள்.

வீட்டில் சுப்பன் படுத்த படுக்கை ஆனான். சௌக்கியம் அடைய வெகு நாள் ஆயிற்று. சுப்பனுக்கு இப்படிப்பட்ட கஷ்டம் வருவானேன்? தகாத இடத்துக்கு அவன் போனான். மண்டை உடைந்து கஷ்டப்பட்டான். ஆதலால்,

சேராத இடந்தனிலே சேரவேண்டாம்.

---

## 17. நன்றியை மறந்தார் நாசமே அடைவார்.

[விச்சுவஉருவன் சரிதம்.]

---

விச்சுவஉருவன் என்பவன் ஒரு அசுரன். அவனுக்கு மூன்றுதலை. துவஷ்டா என்னும் அசுரனுக்கு அவன், மகன். அவன் கல்வியில் பெரியவன். சகல சாஸ்திரமும் படித்து அறிந்தவன். அதினால் அவன் புகழ் எங்கும் பரவினது. தேவேந்திரன் அறிந்தான். அது சமயம் தேவர்களுக்குக் குரு இல்லை. வரவழைத்தான். தேவர்களுக்கும் தனக்கும் குருவாக இருக்கும்படி நியமித்தான்.

விச்சுவ உருவன் தேவர் களுக்குக் குரு ஆனான் எல்லாராலும் வணங்கப் பெற்றான். இந்திரன் யாகம் ஒன்று செய்ய நினைத்தான். விச்சுவஉருவனை நடத்துவிக்கும்படி வேண்டினான். அவனும் ஒப்புக்கொண்டான். யாகம் ஆரம்பம்

ஆயிற்று. தேவர்கள் தாழவேண்டும் அசுரர்கள் வாழ வேண்டும் என்று மந்திரத்தை ஓதினன்.

இதை இந்திரன் கவனித்தான். தனக்கும் தன் குலத்துக்கும் மாருக நடத்துவதை அறிந்தான். அடா 'துஷ்டா' அசுரப்பயலே! நன்றி மறந்தவனே என்று ஏசினன். வச்சிராயுதத்தை எடுத்தான், விச்சுவஉருவனுடைய மூன்று தலையையும் துணித்தான். தலை மூன்றும் மூன்று பறவைகளாய்ப் பறந்தன. விச்சுவஉருவன் மடிந்தான். நன்றியை மறந்தான் விச்சுவ உருவன். ஆகவே, உயிர் துறந்து மடிந்தான். ஆதலால்,

செய்ந்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.

---

## 18. பிணைபோய்நின்றல் பெருங்கேடுண்டாம்.

[பொன்னன் சரிதம்.]

---

ஒரு ஊரில் ஒரு சீமான். பெயர்பொன்னன். பொன்னன் பணக்காரன், மிகுந்த பூமியைஉடையவன். அவனுக்கு ஒரு தோழன், அவன் நல்ல யோக்கியன். புத்திமான். பெயர் சுப்பன். சுப்பன் ஏழை, அவன் குடும்பம் பெரிது. அதன் பாதுகாப்புக்காக அவன் மிகவும் கஷ்டம் அடைந்தான். நீக்க வழி தேடினன். வர்த்தகம் செய்ய நினைத்தான். பணம் வேண்டியிருந்தது.

பொன்னன் உதவியை வேண்டினன். ஒரு கோமுட்டி இருந்தான். அவன் கொடுக்கல் வாங்கல் செய்பவன். வட்டிக்குப் பணம் கொடுப்பவன். இருவரும் கோமுட்டி இடம் சென்றார்கள். "என்தோழனுக்குப் பணம் வேண்டும். பணத்துக்கு நான் ஜாமீன். அவன் பணம்கொடாவிட்டால் நான் கொடுக்கிறேன். பணத்துக்கு ஒரு வருஷம் தவணை வேண்டும்" என்றான் பொன்னன். கோமுட்டியும் சம்மதித்தான்.

பத்திரம் இருபதினாயிரம்ரூபாய்க்கு எழுதப்பட்டது. பொன்னனும் சுப்பனும்கையெழுத்து வைத்தார்கள். பணமும் கிடைத்தது. வியாபாரம் செய்தான் சுப்பன். வெளியில் ஏராளமாக நிலுவை நின்றது. குறித்த தவணைக்குப் பணம் செல்ல இல்லை.

இருவர் மீதும் கோமுட்டி வழக்குச் செய்தான். கடனுக்குப் பொன்னன் சொத்தைக் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்யப்பட்டது. கடன்காரன் சொத்தைப் பிடுங்கிக் கொண்டான். பொன்னன் ஏழையானான். 'ஐயோ' பாவம். துணைபோனாலும் போகலாம், 'பிணை போகலாகுமா' பொன்னன் பிணை போனான். சொத்தை இழந்து ஏழையானான். ஆதலால்,

பிணையிட்டுத் துணைபோய்நீ நிற்கவேண்டாம்.

---

## 19. கட்டுரை யுரைட்போன் கசையடி பெறுவான்.

[நாகப்பன் சரிதம்.]

---

நாகப்பன் என்பவன் ஏழை. வயது இருபது. அவன் துஷ்டன். நடவாத ஒரு காரியத்தை நடந்ததாகச் சொல்லுவான். நடந்த ஒன்றை நடக்க இல்லை என்பான். அவன் ஒரு ராஜா இடம் வேலைக்கு அமர்ந்தான். மாடு மேய்க்கும்படி ராஜா கட்டளை இட்டார். தோட்டத்தில் மேய்த்து வரும்படிசொல்லி இருந்தார். அந்தப்படி அவன் செய்வது இல்லை.

வேறு இடத்துக்குக் கொண்டு போவான். பொட்டலில் மாட்டை அடையப் போடுவான். பொழுது போனதும் தொழுவத்தில் கொண்டு வந்து கட்டுவான். இப்படியே தினந்தோறும் செய்து வந்தான். தோட்டத்தில் மேய்ப்பதாக ராஜா எண்ணி இருந்தார்.

ஒரு நாள் தோட்டத்துக்கு ராஜா சென்றார். நாகப்பன் அங்கு இல்லை. மாடுகளும் இல்லை. திரும்பி அரண்மனை வந்தார். நாகப்பனும் மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்தான். ராஜா அவனை அழைத்தார். மாடுகளையும் கவனித்தார். மெலிந்திருப்பதையும் பார்த்தார். எந்த இடத்தில் மாடு மேய்த்தாய் என்றார். தோட்டத்தில் மேய்த்ததாகவே சொன்னான்.

ராஜாவுக்குக் கோபம் பிறந்தது. கட்டுப்பாடாகச் சொல்லுவதை அறிந்தார். குதிரைச் சவுக்கால் மூன்று டஜன் அடி அடித்தார். இரத்தம் பீறிட்டது. நாகப்பன் கதறி அழுதான். நாகப்பன் அடிபடக் காரணம் என்ன? கட்டுப்பாடான வார்த்தை சொன்னதா லல்லவா?

ஆதலால்,

காணாத வார்த்தைதனை கட்டுரைக்க வேண்டாம்.

---

## 20. நோவ உரைக்கின் சாவது நிசமே.

[சிசுபாலன் சரிதம்.]

தமகோஷன் என்பவன், சேதி நாட்டுக்கு அரசன். அவன் மகன் சிசுபாலன். சிசுபாலன் எவரையும் தூஷிப்பான். வலியவே சண்டைக்கு இழுப்பான். அவன் பொல்லாதவன். இந்திரப்பிரஸ்தம் என்பது ஒரு பெரிய ஊர். அதில் தருமர் ஐராசூய யாகம் நடத்தினர்.

யாகத்துக்கு எல்லா அரசர்களும் சென்றார்கள். வியாசர், பீஷ்மர் முதலானவர்களும் சென்றார்கள். சிசுபாலனும் அங்குபோனன். கிருஷ்ணனும் வந்து சேர்ந்தான். யாகம் முடிந்தது. முதல் மரியாதை யாருக்குச் செய்வது என்று தருமர் கேட்டார். எல்லோரும் ஸ்ரீகிருஷ்ணனுக்கே செய்யும்படி சொன்னர்கள்.

சிசுபாலன் சிரித்தான், சபையை நோக்கி ஞன், 'கிருஷ்ணன்' இடையன், மாடு மேய்ப்ப வன், வஞ்சகன், வேதப்புரட்டன், சுவாமித் துரோகி, கள்ளன், பிறர் மனைவியை இச்சித்த வன், பொய்யன் என்று நூற்றுக் கணக்காகத் தூஷித்தான். எல்லோருக்கும் அது வருத்தமாக இருந்தது.

கிருஷ்ணன் மனம் புண்ணுக நொந்தது. கிருஷ்ணன் எழுந்தான். சக்கராயுதத்தை எடுத் தான். சிசுபாலன் உயிரை வாங்கினுன். சிசுபா லன் செத்து மடிந்தான். மனம் நோகும்படி சிசுபாலன் சொன்ஞன். அது கிருஷ்ணனுக்குப் புண்ணுக இருந்தது. கிருஷ்ணஞல் சிசுபாலன் இறந்தான். ஆதலால்,

புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்.

---

## 21. சழக்கு வழக்கால் தண்டனை வருமே.

[வாயாடி வம்பன் சரிதம்.]

---

ஒரு ஊரில் தேவதத்தன் என்பவன் இருந் தான். அவன் நல்லவன், பொய் சொல்லாத வன். பணம் சம்பாதிக்க அவன் தேசாந்தரம் போக எண்ணினுன். அவனிடம் (1000) ஆயிரம்

இரும்புக் கம்பிகள் இருந்தன. பாதுகாக்கும்படி வாயாடி வம்பன் இடம் கொடுத்தான்.

நீண்ட காலம் சென்றது. தேவதத்தன் ஊர்வந்து சேர்ந்தான். வம்பன் இடம் கம்பிகளைக்கேட்டான். அவன் சண்டி வழக்கன், எதிர் வழக்குச் செய்பவன். ஒருவரும் தனக்கு ஒப்பு இல்லை என்று பெருமை கொண்டவன். வழக்கு எடுப்பதில் வெகு சமர்த்தன், அதனுல் வாயாடி வம்பன் என்று அவனுக்குப் பெயர் வந்தது. வம்பன் இரும்புக் கம்பிகளை மோசம் செய்ய நினைத்தான். கம்பிகளை எலி தின்று விட்டது என்று சொன்னுன்.

நீதிபதி இடம் தேவதத்தன் வழக்குத் தொடுத்தான். விசாரிப்பு நடந்தது. வம்பனை நீதிபதி விசாரித்தார். இரும்புக் கம்பிகளை எலி தின்றுவிட்டது என்று வம்பன் சொன்னுன். உண்மையை அறிந்தார் நீதிபதி. பொய்யன் என்று நினைத்தார். வம்பனுக்குக் கடுந் தண்டனை விதித்தார். கம்பிகளையும் வாங்கிக் கொடுத்தார். தண்டனையால் கஷ்டப் பட்டான் வம்பன்.

பொய் வழக்கு வம்பன் பேசினுன். பொய் நிலை நிற்குமா? உண்மை வெளியாயிற்று. தண்டனை அடைந்தான். பொய் பொய் தான். மெய் மெய் தான். ஆதலால்,

வாதாடி வழக்குரைத்துச் சொல்ல வேண்டாம்.

---

## 22. வல்லப முரைத்தால் அல்லலே யதிகம்.

[தாடகை சரிதம்.]

---

சுகேதனன் என்பவன் ஒரு யக்ஷன். அவன் மகள் தாடகை. அகஸ்தியர் சாபத்தால் அவள் அரக்கி ஆனாள். அவள் ஆயிரம் யானைப்பலம் உள்ளவள். நல்லோருக்குத் தீமையே செய்பவள். ரிஷிகள் செய்யும் யாகத்தையும் அவள் கெடுப்பாள். வீணாகக் கலகம் செய்வாள். தன் பெருமையையே பேசுவாள்.

ஒருவருக்காவது அவளிடத்தில் பிரியம் கிடையாது. எல்லோரும் அவளுக்குப் பயம். விசுவாமித்திரர் காட்டில் ஒரு யாகம் செய்தார். அவர் பெரியவர். முனிவர் யாகத்தைக் கெடுக்க அவள் நினைத்தாள். கஷ்ட நிஷ்டூரங்கள் செய்தாள். யாகம் தடை பட்டது. தசரதச் சக்கரவர்த்தி யிடம் முனிவர் சென்றார். தசரதர் அயோத்திக்கு ராஜா. அவர் பிள்ளை ஸ்ரீராமர், வில்வித்தையில் வல்லவர்.

ஸ்ரீ ராமரை அழைத்து வந்தார். யாகத்தை ஆரம்பித்தார். அப்பொழுதும் அவள் வந்தாள். ஸ்ரீ ராமரையும் பார்த்தாள். தன் திறமையைப்

பேசினுள். யாகத்துக்கு இடையூறு செய்தாள். கலகமும் செய்தாள். ராமருக்குக் கண் சிவந்தது.

வில்லை எடுத்தார், வளைத்தார், ஒரே பாணத்தால் தாடகையைக் கொன்ருர். தாடகை மலை போல விழுந்து இறந்தாள். தாடகை தன் திறமையைப் பேசினுள், கலகமும் செய்தாள், ஸ்ரீ ராமரால் இறந்தாள். ஆதலால்,

திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்.

---

## 23. மெய்யே பேசின் வையமும் போற்றும்.

[வேலன் சரிதம்.]

---

ஏழை ஒருவன். பெயர் வேலன். திருடுவதே அவன்வழக்கம். அதுக்காகக் கொலையும் செய்வான் அவன் ஒரு பெரியவரைக் கண்டான். அவர் சந்நியாசி. சந்நியாசியை வணங்கினுன். உபதேசம் பெற விரும்பினுன். திருடினுலும்சரி. கொலை செய்தாலும் சரி, எது செய்தாலும் சரி, செத்தாலும் பொய் மட்டும் சொல்லாதே என்று சந்நியாசி உபதேசித்தார். வேலன் ஒப்புக் கொண்டான்.

வழக்கம் போல் திருட வேருெரு ஊருக்கு வேலன் போனுன். ராஜ மாளிகைக்குச் சென்ருன். ராஜா உருமாறி இருந்தார். வேலனைக்

கண்டார். நீ யார்? என்று கேட்டார். உள்ளதைச் சொன்னான். பெயரையும் சொன்னான். ராஜாவுக்குச் சந்தோஷம் வந்தது. தன் அரமனைக்கு உள்ளே கூட்டிப் போனார். விலை உயர்ந்த மூன்று இரத்தினங்களைக் காட்டினார்.

வேலன் ஒன்றை வைத்தான். இரண்டை ஆளுக்கு ஒன்றாகப் பங்கிட்டுக் கொண்டான். ஒரு இரத்தினத்தோடு வீடுபோய்ச் சேர்ந்தான். மறுநாள் விடிந்தது. மந்திரியை ராஜா அழைத்தார். இரவில் இங்கு திருடன் வந்தான். என்ன திருடு போயிற்று. அறிந்து வாரும் என்றார். மந்திரி அப்படியே பரிசோதித்து வந்தான். இரண்டு இரத்தினம் இல்லை. ஒன்று மட்டும் இருந்தது. ஒன்றையும் தான் எடுத்துக் கொண்டான். மூன்று இரத்தினம் மட்டும் திருடு போயிற்று என்றான் மந்திரி. ராஜா அறிந்தார். மந்திரியைப் பொய்யன் என்று எண்ணினார்.

வேலனை வரவழைத்தார், இரவில் இங்கு திருடினவன் யார்? என்ன திருடப் பட்டது? என்றார். நானே இங்கு திருடினவன். மூன்று இரத்தினங்கள் இங்கு இருந்தன. ஒன்றை வைத்து விட்டேன். ஒன்று துணையாக வந்தவருக்குக் கொடுத்தேன். நான் ஒன்று வைத்திருக்கிறேன் என்றான் வேலன். மந்திரி விழித்தான். மந்திரியை ராஜா வேலையை விட்டு நீக்கினார்.

கடுமையான தண்டனையும் விதித்தார். வேலனை மந்திரியாக நியமித்தார்.

திருடியும் பொய் சொல்லா திருந்ததால் வேலன் மந்திரியானுன். திருடியும் பொய் சொன்ன மந்திரி தண்டனை அடைந்தான் ஆதலால்,

இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.

---

## 24. பரமனைத் தொழுவார் பெருமையை அடைவார்.

[சாக்கிய நாயனுர் சரிதம்.

---

புத்த மதத்தில் பிறந்தவர் சாக்கிய நாயனுர். அவர் பெரிய கல்விமான். தெய்வவழிபாடு உடையவர். சிவபெருமானை அவர் வழிபட எண்ணினுர். பக்தி கொண்டார், பூஜித்தார், இனத்தார்கள் சிவமதத்தைத் தூஷிப்பவர்கள், 'சிவனை வழிபடாதே' என்றுர்கள். கேட்க இல்லை.

சிவபெருமானைப் பாடுவதும், புகழ்வதும், போற்றுவதுமாக இருந்தார். கெடுதிகள் பல செய்தார்கள். நிந்தித்தார்கள், தடுத்தார்கள். சகிக்க முடிய வில்லை. இனத்தாருக்குக் கட்டுப் பட வேண்டியது ஆயிற்று. வெளிக்குப்பாசாங்கு செய்தார். சிவனை நிந்திப்பது போல நடித்தார். பத்திர புஷ்பங்களால் கடவுளை அர்ச்சிக்கவேண் டும்.

மாருகக் கல்லை எடுத்து எறிந்தார். அன்பு காட்டினர். மலராகப் பாவிக்கும்படி வேண்டி னர். பூஜித்தார். இப்படியே தினந்தோறும் செய்து வந்தார். இனத்தாரும் இவரை வருத்து வது. இல்லை.

அநேக நாள் வரை இப்படியே செய்து வந்தார். சிவபெருமானுக்குக் கருணை பிறந்தது. பக்திக்கு மெச்சினர். என்றும் அழியாத பதவி முத்தி அதை அடைவோருக்குப் பிறப்பும் இறப் பும் இல்லை. சாக்கிய நாயனருக்கு அம்முத்தி யைக் கொடுத்தார்.

சகிக்க முடியாத கஷ்டம் அடைந்தும் சாக் கிய நாயனர் தெய்வத்தை மறப்பது இல்லை,

கல்லை எறிந்தும் வழிபட்டார். அழியாத முத்தி இன்பத்தை அடைந்தார். ஆதலால்,

தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

---

# உலக நீதி

## நீதிக்கதைகள்

முற்றிற்று.

18162
சென்னை-600 008.

வித்தியாரத்நாகரம் பிரஸ், சென்னை.

## தொல்காப்பியமூலம்.

## 1610-சூத்திரங்கள்.

தமிழறிஞர்காள்! (பாக்கட் சைஸ்)

தமிழ் என்னும் இனிய தென்மொழியின் தொன்மை, தன்மை, மக்கள் ஒழுக்கம், அறிவுத்தேர்ச்சி முதலியவற்றை எவர்க்கும் இனிது விளக்குவது 'தொல்காப்பியம்' என்னும் இலக்கண நூலாம். இம்மூலப்புத்தகத்தில் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றதிகாரங்களிலுமுள்ள 1610-சூத்திரங்களும், ஆராய்ச்சியுடனும் பாடபேதக்குறிப்புடனும் சூத்திரத்தலைப்பில் விளங்கும் முதல்பொருளுடனும் அழகாகவும் திருத்தமாகவும் பல நூலாசிரியராகிய பண்டிதர் சிதம்பர புன்னைவனநாத முதலியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. மதுரைத் தமிழ்ச்சங்கக் கௌரவக்காரியதரிசியும், இராமநாதபுரம் ஜில்லா கல்விச்சங்கத்தலைவருமான ஸ்ரீமாந் T. C. ஸ்ரீனிவாசையங்கார் பி. ஏ. பி. எல், எம். எல். சி. அவர்கள் முன்னுரையும் கொண்டது. மகாமகோபாத்யாயர் ஸ்ரீ உ. வே. சாமிநாதையர் முதலிய நூற்பதிப்பாசிரியர்களால் சுத்தமானபதிப்பென பெரிதும் பாராட்டப் பெற்றிருப்பது. 380 பக்கங்கள், காலிகோ பயிண்டு

விலை ரூ. 1—8—0

ஒவ்வொரு தமிழறிஞரிடத்தும், புத்தகசாலை, சங்கம் போன்ற பொது ஸ்தாபனங்களிலும் இருந்து அறிவை வளர்க்கத்தக்கது. அச்சிட்டுள்ள சொற்பப் பிரதிகளிலும் அநேகம் செலவாயுள்ளன. வேண்டுவோர் விரைவில் எழுதுக.

---

P. N. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

பப்ளிஷர்ஸ் & புக்ஸெல்லர்ஸ் & ஸ்டேஷனர்ஸ்,

புதுமண்டபம், மதுரை.

RPR/1290

## புதிய முறைப்படி எங்களால் பப்ளிஷ் செய்யப்பட்ட பாடசாலைக்குரிய தமிழ்ப்புத்தகங்கள்.

| | |
|---|---|
| * நீதிசாரத்திரட்டு | 0—5—0 |
| * செய்யுட்பாடக்கோவை முதற்பாகம் | 0—8—0 |
| * ஷை 2-ம் பாகம் | 1—4—0 |
| * யாக்ஞவல்கியம் | 0—9—0 |
| * அற்புதக்கணையாழி | 0—5—0 |
| * கங்காபாய் சுயம்வரம் | 0—4—0 |
| * துரைத்தன விளக்கப்பாடங்கள் முதற்பாகம் | 0—4—0 |
| * ஷை 2-ம் பாகம் | 0—6—0 |
| * மதுரைஜில்லா பூகோளம் | 0—4—0 |
| * இராமனாதபுரம்ஜில்லா பூகோளம் | 0—4—0 |
| * திருநெல்வேலிஜில்லா பூகோளம் | 0—4—0 |

எஸ். சோமசுந்தரம் பிள்ளையவர்களால் எழுதப்பெற்றது.

| | |
|---|---|
| * உலகநீதி நீதிக்கதைகள் | 0—2—6 |
| * ஆத்திச்சூடி நீதிக்கதைகள் | 0—2—6 |
| * கொன்றைவேந்தன் நீதிக்கதைகள் | 0—2—6 |
| வெற்றிவேற்கை நீதிக்கதைகள் | 0—3—0 |

---

☞ வித்தியாரத்னாகரம் புதிய தமிழ் காப்பிகள்

| | | |
|---|---|---|
| ஷை | நிர்,, 1 | 0—1—0 |
| ஷை | நிர்,, 2 | 0—1—0 |
| ஷை | நிர்,, 3 | 0—1—0 |
| ஷை | நிர்,, 4 | 0—1—0 |
| ஷை | நிர்,, 5 | 0—1—0 |
| ஸ்ரீ ஆழ்வார் குலசேகரன் | | 0—8—0 |
| * பொய்யாமொழிப்புலவர் சரித்திரம் | | 0—5—0 |
| மா. னிடப்பிறவி | | 0—2—0 |

மேற்கண்ட புக்ஸ்களும் மற்றும் ஸ்கூலுக்கு வேண்டிய இதர புக்ஸ்களும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

P. N. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
பப்ளிஷர்ஸ் & புக்ஸெல்லர்ஸ் & ஸ்டேஷனர்ஸ்,
புதுமண்டபம், மதுரை.

---

* இக்குறியுள்ளவை துரைத்தனத்தார் அங்கீகரித்தவை.